DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**O.S. No. 164/2025**

Deposition of Witness : P.W. 2

| | |
|---|---|
| Name - **திரு. வீருசின்னு** | Father's Name - **திரு.** |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **13.03.2026**

**(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )**

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது சின்னமனூரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் வாதி சிங்கராஜை தெரியும். எனக்கு பிரதிவாதி வள்ளிமயிலையும் தெரியும். வாதி சிங்கராஜ் பில்டிங் கான்ட்ராக்ட் தொழில் செய்து வருகிறார். வள்ளி மயில் வேலைக்கு எதுவும் செல்லவில்லை, வீட்டில் குடும்பத்தை பார்த்து வருகிறார். இருவரும் உறவினர்கள் தான்.

2. வள்ளி மயிலிடமிருந்து, சிங்கராஜ் வீட்டை கிரையம் வாங்குவதற்காக 13.12.2021 ஆம் தேதியன்று ரூ.75,00,000/– விலை பேசி ரூ.20,00,000/– முன்பணம் கொடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக கிரைய ஒப்பந்தம் பதிந்து கொண்டார்கள். நான் அந்த கிரைய பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டேன். என்னுடன் பிரதிவாதியான வள்ளி மயில் மகன் விஜயகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்.

3. என்னிடம் காண்பிக்க கூடிய வா.த.சா.ஆ.1. கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பத்திர பதிவாளர் அலுவலகத்திலும்

நான் கையெழுத்து போட்டுள்ளேன். வள்ளி மயிலின் கணவர் இறந்து விட்டார், எனவே பத்திரப்பதிவு முடிக்கவில்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.13 17:38:01 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.